ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


**தொடர்பூட்டல் திணைக்களம்**

30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk


# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 30.07.2015 |

## 2015 யூலையில் பணவீக்கம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டவாறான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றங்களின் மூலம் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் (2006/07 = 100) 2015 யூனில் பதிவுசெய்யப்பட்ட 0.1 சதவீதத்திலிருந்து 2015 யூலையில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் -0.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2015 யூனில் 1.7 சதவீதத்திலிருந்து 2015 யூலையில் 1.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 2015 யூனிலிருந்து யூலைக்கு 0.7 சதவீதத்தினால் அதிகரித்தது.



இவ்வாண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிக்கு, 2014 செத்தெம்பரில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உணவு விலைகளில் அவதானிக்கப்பட்ட கணிசமானளவு கீழ்நோக்கிய திருத்தங்களிற்கு முன்னர் 2014 யூலையில் நிலவிய உயர்வான அடிப்படையே முக்கிய காரணமாகும்.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த அதிகரிப்பு உணவு மற்றும் உணவல்லாத வகைகளிலுள்ள பொருட்களின் விலைகள் அதிகரித்தமையினால் ஏற்படுத்தப்பட்டதாகும். 2015 யூலையில் சில வகைக் காய்கறிகள், உடன் மீன், இறைச்சி, பழவகைகள், உருளைக் கிழங்கு, பச்சை மிளகாய் மற்றும் சின்ன வெங்காயம் என்பவற்றின் விலைகள் அதிகரித்தன. எனினும், இம்மாத காலப்பகுதியில் தேங்காய், பெரிய வெங்காயம் மற்றும் எலுமிச்சம்பழம் என்பவற்றின் விலைகள் வீழ்ச்சியடைந்தன. உணவல்லா வகையினிடையே ஆடைகள் மற்றும் காலணி; தளபாடங்கள், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுப் பேணல்; போக்குவரத்து; பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் ஆகிய துணை வகைகளின் விலைகள் அதிகரித்தன. 2015.07.14ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் எல் பி எரிவாயுவின் விலைகளின் கீழ்நோக்கிய திருத்தத்தின் பகுதியளவான விளைவின் காரணமாக வீடமைப்பு, நீர், மின், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்களின் துணை வகை வீழ்ச்சியினைப் பதிவு செய்தன. நலன்; தொடர்பூட்டல்; கல்வி மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகிய துணை வகைகள் இம்மாத காலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டன.

பொருளாதாரத்தின் முக்கிய பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவிக்கம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2015 யூனில் 2.8 சதவீதத்திலிருந்து 2015 யூலையில் 3.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் முன்னைய மாதத்தில் பதிவு செய்யப்பட்டவாறு 2.8 சதவீதத்தில் மாற்றமடையாது காணப்பட்டது.